2.08.2024 Hmop 11/2021 c/w 154/2021 ம.சா.1 சண்முகப்பிரியா

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

நான் சேர்ந்து வாழ வேண்டும் என தாக்கல் செய்துள்ள வழக்கு எந்த வருடம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியாக ஞாபகமில்லை. 2021 என நினைக்கிறேன். நான் என்போஸ்சில் வேலை செய்து வருகிறேன். நான் எப்போது வேலைக்கு சேர்ந்தேன் என்றால் 2014ம் ஆண்டு சேர்ந்தேன். நான் வேலைக்கு சேரும்போது என் பதவி என்னவென்றால் Systesm Engeineer Trainee ஆகும். தற்போது என் பதவி TEchnology Lee ஆகும். தற்போது நான் பெங்களூரில் வேலை செய்து வருகிறேன். என் தற்போதைய வருமானம் மாதம் ரூ.50ஆயிரம் ஆகும். என்னுடைய சம்பள சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தென்காசிக்கு எப்போது எல்லாம் வந்து போவேன் என்றால் நான் ஆலங்குளத்தில் வசித்து வீட்டில் இருந்து வேலை செய்து வருகிறேன். எதிர்மனுதாரர் எந்த ஊரில் வேலை செய்து வருகிறார் என்றால் பெங்களூரில் வேலை செய்து வருகிறார். எதிர்மனுதாரர் எந்த கம்பெனியில் வேலை செய்து வருகிறார் என்றால் எனக்கு தெரிந்தவரை BSH Household applicance-ல் வேலை செய்து வருகிறார். எனக்கு திருமணம் ஆகும் போது நான் System Engeineer ஆக எம்போசிஸிஸ் நிறுவனத்தில் வேலை செய்தேன். என் வேலை நேரம் 9மணி நேரம் 15 நிமிடம் ஆகும். கூடுதல் நேரமும் வேலை செய்ய கூடும். எனக்கு சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை வாரவிடுமுறை ஆகும். வாரவிடுமுறையை நான் எவ்வாறு செலவிடுவேன் என்றால் என் மகனுடன் செலவிடுவேன். என் திருமணம் திருநெல்வேலியில் நடந்தது. திருமணத்தின்போது என் பெற்றோர்களிடம் இருந்து எனக்கு சீர்வரிசையாக போடப்பட்ட நகைகள் எடை, எண்ணம் பற்றிய விபரம் குறித்து தனிதனியாக குறிப்பிட்டு நான் தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.215/2021லும் இந்த வழக்கு நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். 5லட்சம் ரூபாய் ரொக்கமாக திருமணத்திற்காக கொடுக்கப்பட்டது என்பதை தகுந்த ஆதாரத்துடன் தாக்கல் செய்யவில்லை என்றால் 5லட்சம் ரொக்கமாக கொடுத்தோம். அதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பண்ட பாத்திரம் குறிப்பாக என்னென்ன எவ்வளவு எண்ணம் பற்றி

குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல. திருமண வைபோகங்களுக்காக மண்டப வாடகை, புகைப்படம், சமையல், இசைநிகழ்ச்சி, வரவேற்பு ஆகியவைகளுக்கு என்னென்ன வகைக்கு செலவு பற்றிய விபரம் ஆவணம் மூலம் தாக்கல்செய்யவில்லை என்றால் செலவு ஏற்பட்டது. என் பெற்றோர்கள் செலவு செய்தார்கள். அதற்கான ஆவணங்கள் இல்லை என்றால் சரிதான். 22லட்சம் ரூபாய் திருமணத்திற்காக செலவு செய்யப்பட்டது என்று சொல்வது பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் தரப்பிலும் திருமணத்திற்காக ரூ.10லட்சம் செலவு செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் பி.டெக் படித்துள்ளேன். நான் வேலை நிமித்தமாக வெளிநாடுகளுக்கு சென்றுள்ளேனா என்றால் இல்லை. எதிர்மனுதாரரின் கல்வி தகுதி என்னவென்றால் பி.இ மற்றும் எம்.பி.ஏ படித்துள்ளார். என் திருமண நிச்சயதார்த்தம் நடந்த தேதி மாதம் என்னவென்றால் டிசம்பர் 16-2018 ஆகும். என் திருமண நிச்சயதார்த்தில் யார் யார் கலந்து கொண்டார்கள் என் பெற்றோர்கள், மற்றும் உறவினர்கள் கலந்து கொண்டார்கள். நிச்சயதார்த்தில் புகைப்படம் எடுக்கப்பட்டதா என்றால் இல்லை. எதிர்மனுதாரரின் அம்மா படித்தவரா என்றால் அவர் தலைமை ஆசிரியராக பணிபுரிந்து விருப்ப ஒய்வு பெற்றுள்ளார். எதிர்மனுதாரரின் தாயார் என்னை ஆரம்பத்தில் இருந்து கெட்டவார்த்தைகளால் பேசி என் குடும்பத்தை தரக்குறைவாக பேசியதாக சொல்வது வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரின் தாயரை நான் வீட்டை விட்டு வெளியேற்ற வேண்டும் என்ற எண்ணத்திலும் என் பெற்றோர்களை என் வீட்டிற்கு கொண்டு வர வேண்டும் என்று எண்ணத்தில் நான் செயல்பட்டேன் என்றால் சரியல்ல. என் கணவர் தான் அவரது பெற்றோர்களை தனியாக வைக்க வேண்டும் என்று சொன்னார். நான் 2019ம் ஆண்டு ஏப்ரல் மாதம் கர்ப்பம் ஏற்பட்டதை என் கணவருக்கு தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. முதலில் என் கணவரிடமும், பின்பு என் மாமியாரிடமும் சொல்லிவிட்டு தான் என் பெற்றோர்களிடம் சொன்னேன். எதிர்மனுதாரர் என்னை என் பெற்றோர்கள் வீட்டிற்கு அனுப்பவில்லை என்றாலும் நான் தான் பிரதிவாதியை உதாசீனப்படுத்திவிட்டு தனியாக சென்றேன் என்றால் சரியல்ல. நான் 2019ம் ஆண்டு ஜூலை 16ம் தேதி பிரதிவாதிக்கு அனுப்பிய மின் அஞ்சலில் பிரதிவாதி எனக்கும், எனது குழந்தைக்கும் எந்தவித சட்டபூர்வமான உறவுமுறை கிடையாது என்றும் அவர் குழந்தைக்கு சட்டப்பூர்வமான பாதுகாவலர் இல்லை என்றும் எதிர்காலத்தில் என் குழந்தையை

பார்க்கவோ, தங்கவோ, பொருட்களை வாங்கி கொடுக்கவோ மாட்டேன் என ஒரு ஒப்பந்ததில் கையெழுத்திடும் பட்சத்தில் நானும் அந்த ஒப்பந்தத்தில் விவாகரத்திற்கு கையெழுத்து செய்வதாக தெரிவித்துள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ நான் தாக்கல் செய்துள்ள சேர்ந்து வாழ கோரி தாக்கல் செய்துள்ள எச்.எம்.ஒ.பி வழக்கு கண் துடைப்பிற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரை வேண்டுமென்றே அலைகழிப்பதற்கு அவருக்கு மனஉளச்சல் ஏற்பட்டு வேதனையளிப்பதற்கு மட்டுமே தான் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள சேர்ந்து வாழ கோரி தாக்கல் செய்த மனுவில் பாரா 6ல் கூறியுள்ள படி 5மாத கர்ப்பினியாக இருந்த சமயத்தில் மறுபடியும் எதிர்மனுதாரரின் வீட்டிற்கு நான் சென்றதாக கூறியுள்ளது பொய் என்றால் சரியல்ல. நான் 2019ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் எதிர்மனுதாரரை கைவிட்டு விட்டு சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல. 16.7.2019ம் தேதிய மின் அஞ்சல் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ வேண்டும் என்ற எண்ணம் எனக்கு கிடையாது என்பது தெரிவிக்கிறது என்றால் சரியல்ல. நான் திருமணமாகி எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ்ந்த குறைந்த காலத்தில் நான் எதிர்மனுதாரரின் பெற்றோர்களை கொடுமை செய்து மன அழுத்தத்தையும் மன வேதனையும் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு குழந்தை 20.11.2019ம் தேதி சென்னையில் வைத்து பிறந்தது. தற்போது என் குழந்தைரய Eurokids Anna nagar பள்ளியில் சென்னையில் சேர்த்துள்ளேன். குழந்தை பிறந்த விபரத்தை நானோ, என் பெற்றோர்களோ பிரதிவாதியிடம் நேரடியாக தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. என் அப்பா நேரில் சென்றார். குழந்தையின் பெயர் சூட்டும் விழாவிற்கு பிரதிவாதியிடம் தெரிவிக்க வில்லை என்றால் என் அண்ணன் சென்று சொன்னார். 14.09.2020ம் தேதி குழந்தையை எடுத்து கொண்டு பிரதிவாதி வீட்டிற்கு சென்றதாகவும் அங்கு 15 நாட்கள் தங்கியிருந்ததாகவும் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. நான் 21 நாட்கள் தங்கியுள்ளேன். கொட்டும்மழையில் நானும், குழந்தையையும் நின்று கொண்டு கதவை திறக்குமாறு கேட்டதாக கூறியுள்ள போதிலும் பிரதிவாதியின் தாயார் வீட்டை பூட்டி விட்டு கதவை திறக்க முடியாது என்று சொன்னதாக நான் சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. 17.2.2019அன்று என் திருமணம் திருநெல்வேலியில் வைத்து நடைபெற்றது என்றால் சரிதான்.

திருமணத்திற்கு பிறகு எந்த தேதியில் மீண்டும் வேலைக்கு போக ஆரம்பித்தேன் என்றால் 2வாரம் கழித்து. இந்த வழக்கில் என் நிரூபண வாக்குமூலத்தில் பாரா 3ல் கோயமுத்தூரில் உள்ள சொத்தில் நானும், எதிர்மனுதாரரும் கூட்டு குடும்பமாக வாழ்ந்து வந்ததாக சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. 24.4.2019ம் தேதியிட்ட எதிர்மனுதாரரின் வழக்கறிஞர் அறிவிப்பை விபரம் தெரிந்தே தான் நான் பெற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்பிவிட்டேன் என்றால் சரியல்ல. அறிவிப்பு வந்ததே தெரியாது. 12.4.2019ம் தேதி அன்று நான் என் அப்பாவை தூண்டிவிட்டு என் அப்பா எதிர்மனுதாரரின் அலுவலக மேலாளரிடம் அவரின் அலுவலக மின் அஞ்சல் கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக இளம்தம்பதியினர் இருவரும் ஒரே வீட்டில் இருந்தாலும் பார்க்கமுடியாமலும், பேச முடியாமலும் தடுக்கப்பட்டு இருக்கிறார்கள் என்றும் இருவரும் தனது மகளுக்கு கொடுமைகள் செய்து வருவதாகவும் அவர்களுடைய எதிர்பார்ப்புகள் என்னவென்றே கணிக்கமுடியவில்லை என்றும், எங்களை அவர்களுக்கு எதிராக முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்வதற்கு கட்டாயப்படுத்துகிறீர்கள் என்றும் அதனால் பிரதிவாதி வேலையை இழக்க நேரிடும் என மிரட்டியுள்ளோம் என்றால் சரியல்ல. என்னால் தாக்கல் செய்யப்பட்ட எச்.எம்.ஓ.பி. 11/21 வழக்கு மற்றும் இந்த வழக்குகளிலும் எதிர்மனுதாரர் அவரது தாயார் மற்றும் அவரது தம்பி மீது கோயமுத்தூர் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் கொடுத்த காவல்நிலைய புகாரை பற்றி எதுவும் குறிப்பிடாமல் வேண்டுமென்றே மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி புகாரின் மீது பிரதிவாதியும் அவரது குடும்பத்தினரும் விசாரணைக்காக காவல்நிலையத்திற்கு 15 நாட்கள் அலைகழிக்கப்பட்டதினால் வீட்டில் இருந்து வேலை செய்ய முடியாமல் மனஉளச்சல், மனஅழுத்தம் ஆகியவற்றால் பிரதிவாதியின் குடும்பமே பாதிக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் கொடுமை செய்தேன் என்றாலும் அதனால் எதிர்மனுதாரரின் உடல்நிலை பாதிக்கப்பட்டது என்றாலும் சரியல்ல. நான் எனது கணவரை பற்றி மேல் அதிகாரியிடம் புகார் கூறினேன் என்றாலும் காவல்துறை மூலம் மிரட்டினேன் என்றாலும், என் கணவர் வேலை பார்க்கும் இடமான பெங்களூரில் உள்ள ரவுடி மூலமாக மிரட்டினேன் என்றாலும் சரியல்ல. மேற்படி செயல்கள் மூலம் பலன் இல்லாமல்நான் காவல்துறையில் மீண்டும் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. மேற்படி பல்வேறு முறைகளில் என் கணவரை மிரட்டி விட்டு என் கணவருடன் சேர்ந்து வாழ கோரி மனு தாக்கல் செய்துள்ள

மனு வெறும் கண்துடைப்பு என்றால் சரியல்ல. என்னால் எதிர்மனுதாரருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள அனைத்து மனுக்கள் மற்றும் புகார்கள் அனைத்தும் எதிர்மனுதாரருக்கு மன உளைச்சலை ஏற்படுத்தியது என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரின் தம்பியை பார்த்து படிப்பை தொடரவிடாமல் இடைஞ்சல் செய்யும் வகையில் பேசினேன் என்றால் சரியல்ல. கொரேணா காலத்தில் நான் வேண்டுமென்றே தொல்லை செய்தேன் என்றாலும் எதிர்மனுதாரரின் தாயாருக்கு உடல் மற்றும் மன ரீதியாக துன்புறுத்தல் செய்தேன் என்றாலும் அதன் காரணமாக அவர்களின் பாதுகாப்பு கருதி அளிக்கப்பட்ட புகாருக்கு பழிவாங்கும் எண்ணத்துடன் நான் மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரின் தாயார் என்னால் உடல்நிலை சரியில்லாமல் தற்போது மருத்துவ சிகிச்சையில் உள்ளார் என்றால் சரியல்ல. நான் தொடர்ந்து தொல்லை கொடுத்து வருகிறேன் என்றாலும் அதனால் எதிர்மனுதாரருக்கு மனநிலை மற்றும் உடல்நிலை பாதிக்கும் அளவிற்கு எனது செயல்கள் உள்ளது என்றால் சரியல்ல. கொரேணா காலத்தில் நான் உயிர் அச்சுறுத்தல் பயம் ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. எனது செயல்கள் மற்றும் எனது புகார்கள் அனைத்தும் எதிர்மனுதாரருக்கு உயிர்பயத்தை ஏற்படுத்தியது என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் முன்பின் தெரியாத அலைப்புகளை தவிர்த்தும் தெரியாத நம்பரில் இருந்து கொலை மிரட்டல் விடுக்க கோரினேன் என்றால் சரியல்ல. சமரச பேச்சுவார்த்தையின் போது என் மீதுள்ள குற்றத்தை நான் ஏற்றுக்கொள்ள தயாராக இல்லை என்றால் சரியல்ல. நான் கண்துடைப்பிற்காக சமரச பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டேன் என்றால் சரியல்ல. நான் தற்போதும் சேர்ந்து வாழ தயாராக உள்ளேன். என்னிடம் குழந்தை பாதுகாப்பான முறையில் இல்லை என்றாலும் எனவே குழந்தையை எதிர்மனுதாரரிடம் கொடுக்க வேண்டும் என்றாலும் சரியல்ல. என் பெயரில் உள்ள அசையா சொத்துக்கள் பற்றி விபரம் தாக்கல் செய்யவில்லை என்றால் அவ்வாறு சொத்துக்கள் எதுவும் இல்லை. நான் எதிர்மனுதாரரை சொத்துக்காக தான் தாவா மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் போட்டு வந்த நகைகளில் நான் எடுத்து சென்ற நகைகள் தவிர மீதி நகைகளை பிரதிவாதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளார் என்றால் நான் எந்த நகையும் எடுத்து செல்லவில்லை. 100சவரன் நகைகளும் எதிர்மனுதாரரிடம் தான் உள்ளது. நான் தற்போது திருமாங்கல்யம் அணிந்துள்ளேனா என்றால் அணிந்துள்ளேன். தற்போது நான் அணிந்துள்ள

திருமாங்கல்யம் எதிர்மனுதாரரின் தாயார் போட்டது அல்ல என்றால் சரிதான். எதிர்மனுதாரரின் தாயார் போட்ட திருமாங்கல்யத்தை நான் அலட்சியமாக கழற்றி வைத்து விட்டு செல்வேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரின் தாயார் போட்ட தாலி செயின் பிரதிவாதியின் கைவசம் உள்ளது என்றால் சரிதான். உயர்அதிகாரிகளின் கட்டாயத்தினால் எதிர்மனுதாரர் சேர்ந்து வாழ மிரட்டப்பட்டார் என்றால் சரியல்ல. திருநெல்வேலி குடும்ப நல நீதிமன்றத்தில் எச்.எம்.ஓ.பி.65/ 2020 ஆக எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அது தற்போது மாறுதலாகியுள்ளது. அதன்பிறகு தான் நான் எச்.எம்.ஓ.பி. 11/21 ஆக வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி இருவழக்குகளும் ஒன்றாக விசாரிக்க வேண்டும் என்று உயர்நீதிமன்றத்தில் உத்தரவு பெற்றேன் என்றால் சரிதான். அதன்பிறகு தான் அ.வ.எண்.215./ 2021 வழக்கு என் மகனுக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கையும் அசல் வழக்குடன் ஒன்றாக சேர்ந்து நடந்த எதிர்மனுதாரர் தான் திருநெல்வேலி நீதிமன்றத்தில் உத்தரவு பெற்றார் என்றால் சரிதான். எதிர்மனுதாரருக்கு மனஉளைச்சல் உண்டாக்குவது என் நோக்கம் என்றால் சரியல்ல. வழக்குகள் நிலுவையில் இருக்கும் போது எதிர்மனுதாரரின் இருப்பிடத்திற்கு செல்வது அத்துமீறல் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னால் எதிர்மனுதாரர் தம்பி மீது பொய்யாக புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அதற்கான எதிர்மனுதாரரின் குடும்பமே குற்ற வழக்கு நடத்துவதற்காக பண விரையம் ஏற்பட்டது என்றால் சரியல்ல.எதிர்மனுதாரரின் தம்பிக்கு மனஉளைச்சல் ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் அவரது தாயார் மற்றும் தம்பியை பார்க்க வேண்டிய கடமை உள்ளது என்றால் சரியல்ல. என் செய்கையால் பல்வேறு ஊர்களுக்கு எதிர்மனுதாரர் அலைய வேண்டி நிலை ஏற்பட்டது என்றால் சரியல்ல. உடல் நிலை மற்றும் மனநிலை பாதிக்கப்பட்டது என்றால் சரியல்ல. நாளது தேதி வரை என் சொத்து பற்றிய விபரம் தாக்கல் செய்யவில்லை என்றால் என் பெயரில் எதுவும் இல்லை.

(வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)